# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# 2020

தரம் - 05 பகுதி ii மாதிரி வினாத்தாள் நேரம் 1மணி 15 நிமிடங்கள்

1. பின்வரும் பந்தியை வாசித்து (1) தொடக்கம் (6) வரையான வினாக்களுக்கு விடை தருக

சங்கப் புலவரான குடபுலவியனார் என்ற புலவர் ''உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'' என்கின்றார். நிலமும் நீரும் உணவாக மாறும் திறன் படைத்தவையாகும். பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகளை மண்ணின் மீது கைவிடுகின்றோம். இவை இலகுவில் உக்கி அழியாத்தன்மையுடையவை. இதனால் மண்ணில் மழை ஊடுருவிச் செல்ல முடியாதவாறு தடுக்கின்றது. மண்ணில் வளம் குன்றுகின்றது. மழை நீர் தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேட்டினை ஏற்படுத்துவதுடன் நுளம்பு உற்பத்திக்குக் காரணமாகின்றது.

1) ''உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'' என்பதற்கு பந்தியில் கூறப்பட்டுள்ள கருத்து யாது?
……………………………………………………………………………………………………………

2) இப்பந்தியில் உள்ள இணைமொழி ஒன்று தருக.
……………………………………………………………………………………………………………

3) இப்பந்தியில் உள்ள இருபால் பொதுப்பெயர் ஒன்று தருக.
……………………………………………………………………………………………………………

4) இப்பந்தியில் உள்ள நோய்க்காவி ஒன்றை எழுதுக
……………………………………………………………………………………………………………

5) ''பொலித்தீன் கழிவுகளை மண்ணின் மீது கைவிடுகின்றோம்''. என்பதன் எழுவாயை எழுதுக.
……………………………………………………………………………………………………………

6) ''மண்ணில் வளம் குன்றுகின்றது.'' என்பதனை எதிர்கால வாக்கியமாக எழுதுக.
……………………………………………………………………………………………………………

2. சரியாக இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

1) எமது நாட்டை .................................... ( குப்பை கூழம் / குப்பை கூளம் ) அற்ற நாடாக மாற்றுவோம்.

2) எமது பாடசாலை .................................... ( பரிசளிப்பு விழா / பரிசழிப்பு விழா ) நேற்று நடைபெற்றது.

3. அடைப்பிலிருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

( கூறினீர்கள், ஆடின, அழுதான், உண்டார்கள், சென்றேன், வந்தது )

1) சிறுவன் :- ……………...........……....................

2) நீங்கள் : - ...............................................................



kalvi.lk

4. பின்வரும் வாக்கியங்களை தரப்பட்ட எழுவாய்க்குப் பொருத்தமாக எழுதுக

1) அவன் பாடசாலைக்குச் சென்றிருந்தான்.

நான் பாடசாலைக்குச் ……………………………………………………………………………

2) மாணவர்கள் அங்கு வந்திருந்தார்களா?

நீங்கள் அங்கு ……………………………………………………………………

5. பின்வரும் சொற்களுக்கு எதிர்கருத்துச் சொற்களை எழுதுக.

1) அகம் :- ………………
2) ஒற்றுமை :- …………………

6. பின்வரும் விளக்கத்திற்கான தனிச்சொல்லை எழுதுக

1) ஒன்றைப் போலப் பிரதியெடுத்தல் :- ……………………………………………
2) கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு

: - ……………………………………..

7. சேர்த்து எழுதுக.

1) முள் + செடி : - ………………………………………………………………………

2) தெற்கு + திசை: - ………………………………………………………………………

8. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1) இளங்கன்று பயமறியாது

……………………………………………………………………………………………..

2) அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்.

……………………………………………………………………………………………

9. இடைவெளி நிரப்புக

1) தவளைக்கு பேத்தை போல தென்னைக்கு ……………………………………………..

2) புல்லிற்கு தாள் போல வாழைக்கு ……………………………………………………..

10. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. (...............)

2. மான்கூட்டம் சிதறி ஓடியன. (...............)

11. பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக ?

1) கதிரை :- ………………………………

2) மஞ்சள் நிறம் :- ……………………………………………...



kalvi.lk

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக

1) Spider :- ……………………………

2) Rivers :- ……………………………………………

13. பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொற்களினதும் கருத்தை தமிழில் எழுதுக

1) அம்(B)ப கச :- ……………………

2) வவ்லா :- ………………………………………..

14. பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக

1) தும்புத்தடி:- ………………………………

2) யாருக்கு : -- ……………………………………

- **விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக**

15. மூவாயிரத்து இருநூற்று ஏழு என்பதை இலக்கத்தில் எழுதுக ?

……………………………………………………………………………………………

16. கீழுள்ள எண்ணுக்கு முன்னால் வரும் எண்ணையும் பின்னால் வரும் எண்ணையும் எழுதுக ,

…………… , 2499 , …………………

17. 0.9 என்பதனை பின்னத்தில் எழுதுக = ……………………..

18. இடைவெளி நிரப்புக 4m = 320 cm + ……….. cm

19. ஒரு வகுப்பிற்கு 87 அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இவை ஒரு மாணவருக்கு நான்கு வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டன எனின்


1) அப்பியாசக் கொப்பிகள் எத்தனை மணவர்களுக்கு வழங்கப்பட்டன?

……………………………………………………………

2) அவை வழங்கப்பட்ட பின் எத்தனை கொப்பிகள் மீதமிருந்தன

………………………………………………………………..

20.




இவற்றுள் செங்கோணங்கள் உள்ள உருக்கள் எவை ?

………………………………………..


21. பேருந்து ஒன்றில் 44 பேர் பயணம் செய்தனர். முதலாவது தரிப்பிடத்தில் 17 பேர் இறங்க 12 பேர் ஏறினர். இரண்டாவது தரிப்பிடத்தில் 10 பேர் இறங்க 8 பேர் ஏறினர். வண்டியில் தற்போது பயணம் செய்வோர் எத்தனை பேர்?

....................................................................



kalvi.lk

22. இடைவெளி நிரப்புக





23. மேடை நாடகம் ஒன்றைப் பார்வையிடுவதற்காக தரம் 4 வகுப்பில் ஒரு மாணவனிடமிருந்து ரூபாய் 8.00 அறவிடப்பட்டது. அவ்வகுப்பில் 38 மாணவர்கள் இருந்தனர் எனின் அங்கு சேகரிக்கப்பட்ட மொத்தப்பணம் எவ்வளவு?

……………………………………………………………

24. 3kg கோப்பித் தூள் 50 பக்கற்றுகளில் சமனான அளவில் அடைக்கப்பட்டது. ஒரு பக்கற்றின் நிறை யாது?

……………………………………………………………

25. படத்தில் $\frac{1}{4}$ பங்கிற்கு நிறந் தீட்டுக



26. ஒரு தொட்டியில் 4 $l$ நீர் உள்ளது. அதில் இருந்து 900 m$l$ நீர் வெளியே எடுக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?

……………………………………………………………………………………

27. அத்தீக் பையொன்றில் 8 இனிப்புகள் வீதம் உள்ள 9 பக்கற்றுகளை வைத்திருந்தான். அவற்றுள் 34 இனிப்புகளை தனது வகுப்பு மாணவர்களுக்கு வழங்கினான் எனின் அத்தீக்கிடம் மிகுதியாக இருக்கும் இனிப்புகள் எவ்வளவு

……………………………………………………………………………………

- மும்மொழிப் பாடசாலைகள் இரண்டில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது. அதனை அவதானித்து கீழுள்ள 27, 28, 29, 30 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக?

| பாடசாலை | தமிழ் மொழி | சிங்கள மொழி | ஆங்கில் மொழி |
|---|---|---|---|
| ஜனாதிபதிக் கல்லூரி | 625 | 588 | 422 |
| மஹஜனக் கல்லூரி | 542 | 577 | 468 |

28. இரு பாடசாலைகளிலும் தமிழ் மொழியில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது ?

……………………………………………………………………

29. இருபாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களினது எண்ணிக்கையின் அடிப்படையில் எம்மொழியில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்?

……………………………………………………………………



kalvi.lk

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

30. பழுதடைந்த மரவள்ளிக்கிழங்கு எந்நிறமாக மாற்றமடையும்.
   1) கறுப்பு 2) பச்சை 3) நீலம் 4) மஞ்சள்

31. எட்டுக் கால்களை உடைய பிராணிகளில் ஒன்று
   1) எறும்பு 2) இலையான் 3) தேள் 4) இறால்

32. பூவில் ஆண்பூ மட்டும் கொண்ட பூ
   1) பூசணி 2) வேம்பு 3) நாவல் 4) கொய்யா

33. பின்வருவனவற்றில் எதில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும் ?
   1) தனியார் பஸ்வண்டி 2) கூட்டுறவுச்சங்கம் 3) பயிற்சிக்கொப்பி 4) பாட நூல்கள்

34. பூத்து காய்க்காத தாவரம் ஒன்று
   1) கள்ளி 2) மா 3) சேம்பு 4) அகத்தி

35. அசுத்தமான நீரை பருகுவதால் ஏற்படும் நோய் அல்லாதது
   1) நெருப்புக்காய்ச்சல் 2) கொலரா 3) வயிற்றோட்டம் 4) யானைக்கால்

36. இலைகளிடையே மறைந்து வாழும் பிராணி எது
   1) மரங்கொத்தி 2) காகம் 3) கும்பிடு பூச்சி 4) செவ்வெறும்பு

37. தேசப்படத்தில் மலைகளை காட்டுவதற்கு தீட்டப்பட்டிருக்கும் நிறம்
   1) சிவப்பு 2) கறுப்பு 3) கபிலம் 4) பச்சை

38. நிலத்தின் அடியில் பொந்தமைத்து வாழும் பிராணி
   1) சிலந்தி 2) முயல் 3) தேனீ 4) ஆந்தை

39. எமது நாடு குடியரசானது எந்த ஆண்டில்
   1) 1948 2) 1974 3) 1972 4) 1815

40. பின்வருவனவற்றுள் காந்தம் பயன்படும் உபகரணங்களை மட்டும் கொண்ட தொகுதி.

   1) திசையறி கருவி , தைனமோ , மின்குமிழ்
   2) திசையறி கருவி , தைனமோ , ஒலிபெருக்கி
   3) தைனமோ , மின்குமிழ் ̇, தூக்குக்குண்டு
   4) உலர்மின்கலம் ̇, தைனமோ, ஒலிபெருக்கி

41. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் பொதியில் இல்லாத விடயம் ஒன்று,

   1) அது பயன்படுத்தும் விதம்
   2) அதனில் அடங்கியுள்ள பொருட்கள்
   3) உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டின் பெயர்
   4) காலவதியாகும், உற்பத்தி திகதிகள்.

42. இலங்கையின் அழகிய நீர் வீழச்சிகளில் ஒன்றான துன்கிந்தை எந்த நதியில் உள்ளது.
   1) மாணிக்ககங்கை 2) களுகங்கை
   3) மகாவலி கங்கை 4) களனி கங்கை

43. முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும் பிராணி?

1) வௌவால் 2) கிவி 3) எறும்புண்ணி 4) எலி

44. வானத்தில் மிக உயரத்தில் காணப்படும் முகில்

1) படைமுகில் 2) கீற்று முகில்
3) திரள் முகில் 4) கரு முகில்

45. பின்வருவனவற்றுள் காந்தம் கவராதபொருள்,

1) இரும்பாணி 2) தங்கமோதிரம் 3) குண்டூசி 4) உருக்குச் சாவி

46. பின்வருவனவற்றுள் எது நச்சுத் தன்மையானது ?


1


2


3


4

47. பின்வரும் வித்துக்களில் எது வெடிப்பதன் மூலம் பரம்பலடையும்,

1) றம்புட்டான் 2) இறப்பர் 3) மா 4) மரமுந்திரிகை


48. பின்வருவனவற்றுள் தினமும் பூக்கும் பூ அல்லாதது எது?

1) கடுபுல் 2) வேம்பு 3) நெருஞ்சி 4) அகத்தி

49. பின்வருவனவற்றுள் எது வடமேல் மாகாணத்திற்குரிய மாவட்டங்களில் ஒன்றாகும்

1) பொலநறுவை 2) புத்தளம் 3) திருகோணமலை 4) வவுனியா

50. மஞ்சள் நிறப்பின்னணியில் காணப்பம் இக்குறியீடு குறிப்பது



1) முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
2) பாதுகாப்பான புகையிரதக் கடவை
3) முன்னால் புகையிரதம் வரும்
4) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை

51. கடதாசி மடிப்பு முறையினால் பிராணிகளின் மாதிரி உருக்களை ஆக்கும் ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

1) ஸ்ரென்சில் 2) கொலாஜ் 3) ஓரிகாமி 4) பரவுருபம்

52. நீரின் இயல்புகள் தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது ?

1) வடிவம் இல்லை
2) பரவிச்செல்லக்கூடியது
3) நிறம் இல்லை
4) விரைவில் ஆவியாகக் கூடியது

53. தரப்பட்டுள்ள குறியீடு குறிப்பது

1) இலங்கை மின்சார சபை
2) இலங்கை அஞ்சல்
3) சிறிலங்கா ரெலிகொம்
4) இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்

54. விறகு அடுப்பினுள் உப்புக்கட்டியை இடும்போது அவதானிக்கக்கூடியது.

1) உப்புக்கட்டி உருகும்
2) உப்புக்கட்டி கரையும்
3) மாற்றம் எதுவும் ஏற்படாது
4) வெடியொலி கேட்கும்

55. இலங்கையின் மிக உயரமான பேதுறுதாலகால மலை அமைந்துள்ள மாகாணம் எது.

1) கிழக்கு மாகாணம்
2) மத்திய மாகாணம்
3) ஊவா மாகாணம்
4) சப்ரகமுவ மாகாணம்

56. பூனை தனது இரையைக் கண்டறிவதற்கு உதவுவது

1) கண்
2) காது
3) மீசை
4) மூக்கு

57. மரங்களை நடுவதன் மூலம் கிடைக்கும் நன்மை அல்லாதது.

1) சுத்தமான வளி கிடைத்தல்
2) மண்ணரிப்பு ஏற்படல்
3) மண் வளம் பெறுவதற்கு பசளை கிடைத்தல்
4) நிழல் கிடைத்தல்

58. படத்தில் உள்ள ஆக்கத்தைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்



1) பனையோலை
2) குருத்தோலை
3) வாழை இலை
4) மூங்கில்


59. பிறப்பு/இறப்புச் சான்றிதழ் பதிவு செய்வதற்காக நாம் செல்ல வேண்டிய இடம்

1) மாநகர சபை
2) பிரதேச சபை
3) பிரதேச செயலகம்
4) மாவட்ட செயலகம்



kalvi.lk

60. காட்சிப்படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேற்பட்டதாகவும் எழுத்துப்பிழைகளின்றியும் சரியான எழுவாய் பயனிலைத் தொடர்புகள் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.)



.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

Education கல்வி අධ්‍යාපන

அரசாங்கத்தினதும் வைத்தியர்களினதும் அறிவுத்தல்களைப் பின்பற்றி அவதானமாக இருக்குமாறு உங்களை வினயாமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

புலமைப்பரிசில் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களைக் கேட்க விரும்புவோர் 0774523973 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு Viber / Whatsapp இற்கு வினாக்களை அனுப்பி (புகைப்படம் எடுத்து) விட்டு என்னுடன் தொடர்பு கொள்ளவும்

அனைவரும் நலமாக இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்



kalvi.lk